**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No. 12/2022**

**வழக்கு சாட்சி PW.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **நிவேதா ஸ்ரீ** | தொழில் | : போட்டி தேர்விற்காக பயின்று வருகிறேன் |
| தகப்பனார் பெயர் | : பாலாஜி | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 22/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 19.01.2026 |

**( எதிரிகள் A1, A2 மனுவின்பேரில் பெயரில் ஆஜர் இல்லை)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பண்ணைக்காட்டில் வசித்து போட்டி தேர்விற்காக பயின்று வருகிறேன். அ.சா.1, 2 எனது அம்மா, அப்பா ஆவார்கள். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும் . அவர்கள் எனது உறவினர்கள் ஆவர். கடந்த 22.06.2021 ம் தேதி காலை நேரத்தில் எனது அப்பா எனது அண்ணன் பார்த்திபராஜன் என்பவரை திட்டிக்கொண்டிருந்தார். அப்போது எங்கள் வீட்டின் அருகே கட்டிட வேலை செய்து கொண்டிருந்த ரமேஷ் , பரத் ராஜன் அவர்களைத்தான் எனது அப்பா திட்டுவதாக நினைத்துக்கொண்டார்கள். எனது அப்பா, எனது அண்ணாவை திட்டிவிட்டு விஷேசம் ஒன்றிக்கு சென்றுவிட்டார் . பிறகு மதியம் சுமார் 2.45 மணியளவில் பண்ணைக்காட்டில் எங்களது வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்த எனது அப்பாவை அங்கு வந்த எதிரிகள் ரமேஷ், பரத் ராஜன், ஹரிஷ் ராஜா ஆகியோர் மூவரும்

ஒன்று சேர்ந்து எனது அப்பாவின் சட்டையை பிடித்து வெளியே இழுத்து வந்து சாலையில் கிடந்த குவாட்டர் கண்ணாடி பாட்டிலைக்கொண்டு எதிரி பரத் ராஜா எனது அப்பாவின் தலையில் அடித்தார். அதில் எனது அப்பாவிற்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. அப்போது அந்த சண்டையைப்பார்த்து விலக்கி விடச்சென்ற எனது அண்ணன் பார்த்திபராஜாவையும், எதிரிகள் பரத் ராஜன், ஹரிஷ் ராஜன் ஆகியோர் அவர்களது கைகளால் தாக்கினார்கள். அப்போது பக்கத்தில் இருந்த நபர்கள் மற்றும் பக்கத்து வீட்டைச்சேர்ந்தவர்கள் வந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். பிறகு எதிரிகள் பரத் ராஜன், ஹரிஷ் ராஜன் ஆகிய இருவரும் கல்லைக்கொண்டு எங்கள் வீட்டுச் ஜன்னல் கண்ணாடிகளில் உடைத்துவிட்டு சென்றுவிட்டார்கள் . எனது அப்பாவை, எனது அம்மாவும் , எனது அண்ணாவும் பண்ணைக்காடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றோம். எனது அப்பா 2-3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்கையில் இருந்தார். சம்பவம் தொடர்பாக எனது அப்பா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் . போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

On behalf of the Accused counsel Mr.M.Murugesan being present, was provided with opportunity to cross the witness present. The same not being availed cross of PW4 is closed.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.01.19 17:58:24 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No.12/2022**

**வழக்கு சாட்சி PW. 5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **குருவம்மாள்** | தொழில் | : காட்டு வேலை செய்து வருகிறேன் |
| தகப்பனார் பெயர் | : | கணவர் பெயர் | : சீனிவாசன் |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 38/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 19.01.2026 |

**( எதிரிகள் A1, A2 மனுவின்பேரில் பெயரில் ஆஜர் இல்லை)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பண்ணைக்காட்டில் வசித்து காட்டு வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 2 ஆகியோரை தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டைச்சேர்ந்தவர்கள். இந்த வழக்கின் எதிரிகளைத் தெரியும். கடந்த 22.06.2021 ம் தேதி மதியம் 02.45 மணியளவில் நான் எனது வீட்டிற்குள் இருந்தபோது அதிகமாக சத்தம் கேட்டது. நான் வெளியே வந்து பார்த்தபோது எதிரிகள் ரமேஷ் மற்றும் இரண்டு நபர்களும் சேர்ந்து பாலாஜி என்பவரை கீழே கிடந்த குவாட்டர் கண்ணாடி பாட்டிலைக்கொண்டு தலையில் அடித்தார்கள். பிறகு அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள். அடிப்பட்ட பாலாஜியை மருத்துவமனைக்கு கொண்டுசென்றார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

On behalf of the Accused counsel Mr.M.Murugesan being present, was provided with opportunity to cross the witness present. The same not being availed cross of PW4 is closed.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.01.19 17:58:32 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.